Crl. Misc.39

Pg.No.

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure).**
**IN THE COURT OF ADDITIONAL MAHILA COURT, KARUR**
**DVC No. 60/2022**

**Deposition of Witness :RW1**

| Name | அன்பழகன் | Taluk | |
|---|---|---|---|
| Father's Name | ராஜு | Village | |
| Age | | Calling | |
| **Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act of 1969 (Act 44 of 1969) on the day of 09.03.2026.** | | | |

**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

1) எனக்கு எந்தெந்த வங்கியில் சேமிப்பு கணக்கு உள்ளது என்றால் IOB, Central Bank of India என்ற இரண்டு வங்கிகளில் உள்ளது. மேற்படி 2 வங்கிகளிலும் தொழிலுக்காக வேண்டி வைத்துள்ளேனா என்றால் இல்லை. நகைக்கடன் பெற்றுள்ளேன். எத்தனை பவுனுக்கு கடன் பெற்றுள்ளேன் 13 பவுன் பெற்றுள்ளேன். மனுதாரருக்கு இடைக்கால ஜீவனாம்சம் கொடுக்கவேண்டுமென்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதன்படி நான் தொகை எதுவும் செலுத்தவில்லை என்று சொன்னால் சரிதான். நான் கடந்த தீபாவளியன்று மனுதாரர் வங்கி கணக்கிற்கு ரூ.2 ஆயிரம் பணம் அனுப்பியிருந்தேன் என்று சொன்னால் சரிதான். என்னுடைய குழந்தை முதலில் எந்த பள்ளியில் படித்தார் என்றும், தற்போது எந்த பள்ளியில் படித்து வருகிறார்என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. எந்த வகுப்பு படித்து வருகிறார் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும். நான் என்னுடைய குழந்தைக்கு பள்ளிக்கான கட்டணசெலவு, பராமரிப்பு செலவுகள், மருத்துவசெலவுகள் செய்யவில்லை என்ற சொன்னால் சரிதான். 2020 க்கு முன்பு வரை நான் கொடுத்தேன்.

2) எனது குழந்தைக்கு வலிப்பு நோய் உள்ளது என்றால் சரிதான். நான் மனுதாரரை அடித்து, விரலை உடைத்ததால்தான் மனுதாரர் என் மீது மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்திருந்தார் என்று சொன்னால் சரியல்ல. மனுதாரர் என்னை முஸ்லீம் மதத்திற்கு மாற சொன்னார். திருமணத்திற்கு முன்பு நாங்கள் காதலித்து இந்து முறைப்படிதான் திருமணம் செய்து கொண்டோம் என்று சொன்னால் சரிதான். மனுதாரர் என்னை முஸ்லீம் மதத்திற்கு மாற சொன்னதாக சொல்லியுள்ள விவரம் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. மனுதாரர் என் மீது மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்திருந்தார் ,

Sd/–T.Wajitha Thabassm
நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகளிர் நீதிமன்றம், கரூர்

அதன்பேரில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்று சொன்னால் சரிதான். மேற்படி புகாரின்பேரில் தான் சிசி எண். 66/2020 என்ற வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்டு சந்தேகத்தின் பலனை அளித்து என்னை விடுதலை செய்து தீர்ப்பு வழங்கப்பட்டது என்றால் சரிதான்.

3) மனுதாரரை எனது தரப்பில் குறுக்கு விசாரணை செய்யும்போது மனுதாரர் ஏற்கனவே தாக்கல் செய்த வழக்கு தள்ளுபடி ஆனது, மேற்சொன்ன சிசி எண். 66/2020 என்ற வழக்கு தான் என்றும், அவர் தனியாக இந்த வழக்கை தவிர வேறு எந்த வழக்கும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. மற்றொரு வழக்கும் விவாகரத்து கோரி தாக்கல் செய்துள்ளார். மனுதாரரை மன ரீதியாகவும், உடல் ரீதியாகவும் கொடுமைப்படுத்தினேன் என்று சொன்னால் சரியல்ல. நான் வழக்கிற்காக மனுதாரர் என்னை முஸ்லீம் மதத்திற்கு மாற சொன்னதாக பொய்யாக சொல்லியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. மனுதாரர் கோரியப்படி தீர்ப்பாக வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

Sd/–T.Wajitha Thabassm
நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகளிர் நீதிமன்றம், கரூர்